<u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

**ஓ.எஸ்.எண். 78/2014** **நாள்.21.09.2023**

2023 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 ம் நாள் வாதி தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ராஜி | சாதி | |
| கிராமம் | ஈயக்குணம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 49 |

**<u>வ.சா.3</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

I. நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியும். எனது சொந்த ஊர் ஈயகுணம் ஆகும். எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் விவசாய மற்றும் மேஸ்திரி வேலையும் செய்கிறேன். ஆறுமுகம் என்பவர் எனக்கு சம்பந்தி உறவு முறையாகும். வாதி சீனிவாசன் ஆறுமுகம் என்பவருக்கு உறவினர் ஆவார். நான், வாதி, ஆறுமுகம் உறவினர் என்றால் சரிதான். சீனிவாசன் என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி , இவ்வழக்கை கணேசன் மற்றும் அவரின் மனைவிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். எனக்கு விவசாய கூலி வேலை என்றால் சரிதான். விவசாய கூலி மூலம் ஒரு வருமானம் தான் என்றாலும், என் மகன் ஜே.சி.பி இயந்திரம் ஓட்டி சம்பாதிக்கிறார். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் இல்லை என்றால் சரிதான். நான் பாண்டின் பேரில் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்வது கிடையாது.

II. ஆறுமுகம் என்பவருக்கு அடமானம் மற்றும் பாண்டின் பேரில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்தேன். 1ம் பிரதிவாதி நிலம் வாங்குவதற்காக என்னிடம் கடன் வாங்கினார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் முழுமையாக படித்து பார்க்கவில்லை. அதில் உள்ள விவரங்கள் வாதிக்கு தான் தெரியும். 3 ம் பிரதிவாதி பெயர் தெரியாது. 1ம் பிரதிவாதி மற்றும் அவரின் குடும்பத்தை பற்றி ஆறுமுகத்திற்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. ஏழுமலை என்பவர் என்னிடம் ரூ. 5 லட்சம் பாண்டின் பேரில் கடன் பெற்றார். அந்த பாண்டை வாதிக்கு மேடுஓவர் எழுதிகொடுத்துவிட்டேன். ஏழுமலைக்கு எத்தனை சகோதரர் என்று எனக்கு தெரியாது. ஏழுமலை எழுதிக்கொடுத்தாக சொல்லும் பாண்டில் நான் ஒரு கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை எப்பொழுது போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அதை எப்பொழுது போட்டேன் என்று ஆறுமுகத்தை கேட்டால் தெரியும் என்றால் சரிதான்.

III. நான் 1ம் பிரதிவாதிக்கு வழக்கிறஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன். எந்த தேதியில் அனுப்பினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை . தாவா பாண்டு பற்றிய விவரம் ஆறுமூகத்தை கேட்டால் தெரியும். நான் கடன் கொடுத்ததாக சொல்லும் கடனை கொடுப்பதற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் ஏழுமலையையும், அவரது சகோதரரையும் , தாயாரையும் நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரங்கள் எனக்கு தெரியாது. நான் பாண்டின் பேரில் தான் கடன் கொடுத்தேன். பாண்டு எந்த கலர் பேப்பரில் எழுதப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. என் சம்பந்தி ஆறுமுகம் சொன்னதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விவரம் தெரியாது என்றால் சரியல்ல.